1981 மார்ச் 25]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(இ) இக்காரணத்திற்காக அமைக்கப்பட்ட முன்னோடிக் குழுவின் பரிந்துரை பரிசீலனையில் இருக்கிறது.

(உ) இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இது வரவேற்க வேண்டிய ஒரு செயற்குறிப்பு என்பதால், யோகாசன முறைகளைக் கற்றுத் தருகின்ற பல்வேறு நிலையங்கள் இருந்தாலும், அவை மற்றவர்களுக்குப் பயன்படும் வகையில் நகரத்தில் இருக்கிற பார்க்குகளிலேயும், மற்ற பொது இடங்களிலே யும் நடத்த முன்வந்தால், அவைகளை ஊக்குவிக்க அரசு முன்வருமா? அப்படிப்பட்ட இடங்களில் யோகாசனப் பயிற்சி அளிக்க அரசு அனுமதிக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இப்போது ஆரம்பக் கட்டத்தில் இருக்கிறது. Third Joint meeting of the Central Council held in 1976. It has been recommended that the Yoga System might be approved as a recognised form of treatment of psychosomatic medicines. In order to enable the Government to take a decision on this, a preliminary committee on the Yoga System was constituted in 1977. மத்திய அரசினுடைய செண்ட்ரல் கவுன்சிலின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1977-லே ஒரு குழுவை அமைத்திருக்கிறோம். அதற்கு Terms of reference கொடுத்திருக்கிறோம். அவை,

(1) Whether Yoga can be recognised as a system of treatment; (2) To define the objects and aims of this treatment; (3) Norms for giving financial assistance to private Yoga institutions. என்பவையாகும். அந்த 3 terms of reference -ன் கடைசியாக உள்ளதன் படி, அங்கீகாரம் அளிக்கப்பட்ட இன்ஸ்டிடியூஷனாக இருந்தால், அவர்களுக்கு நாம் பண உதவி செய்யலாமென்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : Transcendental Meditation என்று இப்போது பேசப்படுகிறது. அது பற்றியும் அரசு கவனித்து, அதை ஊக்குவிக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : 'டி.எம்.' என்று சொல்லப்படுகிறது Transcendental Meditation என்பதுகூட யோகா மாதிரி நடந்துகொண்டிருக்கிறது. அதனால் ப்ளட் பிரஷர் குறையும் என்று சொல்லுகிறார்கள். எனவே யோகா என்ற முறையில் வரும்போது, இப்படிப் பட்டவைகளையும் கொண்டுவருவதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

[1981 மார்ச் 25

டாக்டர் இரா. சனார்த்தனம் : வெளி நாடுகளில் யோகாசனத்தைப்பற்றித் தவறான கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். நெருப்பில் படுக்கலாம், நீரில் மிதக்கலாமென்று சொல்லி ஏமாற்றுகிறார்கள். எனவே உண்மையிலேயே யோகாசனம் என்பது என்ன என்று விளக்கி ஒரு நூல் வெளியிடப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அரசு நூல் வெளியிட முடியாது. அப்படி யாராவது எழுத முன் வந்தால், அவர்களுக்கு எல்லாவித உதவியும் தரலாம்.

திரு. க. இராமமூர்த்தி : யோகாசனப் பயிற்சிகளுக்கு நிதி ஒதுக்கீடு ஒரு பக்கம் இருந்தாலும், இப்போது யோகாசனப் பயிற்சி பெறுகிறவர்கள் இலவசமாக சென்னை கடற்கரையில் காலை 4 அல்லது 5 மணியளவில் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இது போன்ற பயிற்சிகளைத் தர யாராவது முன் வந்தால், மாநகராட்சிக்குச் சொந்தமான பார்க்குகளில் அந்தப் பயிற்சிகளை நடத்த அரசு இடமளிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, நம்முடைய மாநிலத்தில் போடப்பட்டுள்ள கமிட்டி 8 பரிந்துரைகளைக் கொடுத்திருக்கிறது. அதிலே 7-வது பரிந்துரை யோகா ரிசர்ச் சென்டர்களை ஏற்படுத்த வேண்டுமென்பது. அதாவது,

Kilpauk Medical College : Diabetes Meritus ; General Hospital : for hypertension and preventable heart diseases ; Arignar Anna Hospital for Indian Medicine : treatment of arthitis and brnchial asthma. Stanley Hospital : Peptic ulcer and gastro-intestinal disorders of psychic nature, colitis ....

இந்த நான்கு இடங்களில் யோகா ரிசர்ச் சென்டர்களை ஏற்படுத்த வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன மாதிரி, வேறு யாராவது முன் வந்தால், இந்த நான்கு இடங்களோடு தொடர்பு வைத்துக்கொள்வார்களானால், அவர்களுடைய பயிற்சி, திறமை ஆகியவற்றை இங்கே கொடுத்தால், அவற்றைப் பயன்படுத்தத் தயாராக இருக்கிறோம்.

(முற்பகல் 10-00)

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : பரீட்சார்த்தமாக ஒரு யோக நிலைப் பயிற்சி நிலையம் தலைமைச் செயலக மருத்துவமனையையொட்டி சேர்த்து நடத்தப்படுமா ?

1981 மார்ச் 25]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இங்கே உள்ள மருத்துவ மனையையொட்டி சேர்த்து நடத்துவதை விட நான் முன்பே சொன்ன நான்கு பயிற்சி நிலையங்களில் ஏதாவது ஒன்றில் விருப்பமுள்ளவர்கள் சேர்ந்து பயிற்சி பெற்றுப் பயனடைவதுதான் நல்லது.

திரு. ம. சங்கரலிங்கம்: 1977 ஆம் ஆண்டு யோக நிலைப் பயிற்சி பற்றிப் பரிசீலனை செய்து அரசுக்கு அதுபற்றிய சிபாரிசுகளைச் செய்வதற்காக ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டதாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கமிட்டியில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் யார் யார்? தமிழகத்தில் 18 சித்தர்கள் இருந்ததாகவும், அவர்கள் எல்லாம் 11, 12 ஆம் நூற்றாண்டுகளில் சித்த மருத்துவத்திலும், யோக நிலைப் பயிற்சியிலும் வல்லவர்களாக இருந்ததாகவும் நூல்கள் வாயிலாகத் தெரிய வருகிறது. ஆகவே சித்தா வைத்தியத்தில் வல்லவர்களாக இருப்பவர்களையும் அந்தக் கமிட்டியில் உறுப்பினர்களாகச் சேர்த்து அவர்களுடைய சிபாரிசு களையும் பெற அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இந்தக் கமிட்டியில் டாக்டர் வி. நாராயணசாமி சேர்மேனாக இருக்கிறார். அவர் ஆயுர்வேதத்தில் வல்லவர். அதுபோல் டைரக்டர் ஆஃப் இந்டிஜீனியஸ் மெடிசன் டாக்டர் பாலசுப்பிரமணியம் உறுப்பினராக இருக்கிறார். இவர் சித்தா வைத்தியத்தில் நிரம்பப் பயிற்சி பெற்றவர். இரண்டு பேருடைய பெயர்கள் மட்டும் என்னுடைய ஞாபகத்தில் இருப்பதால், சொல்லியிருக்கிறேன். ஏறத்தாழ மூன்று ஆண்டுகளாக இது இருந்துகொண்டிருக்கிறது. முன்பு இருந்த அரசு நம் மாநிலத்தில் இம்மாதிரி ஒன்றை அமைக்காமல் திருப்பதியில் இருக்கக் கூடிய ஒரு இன்ஸ்டிட்யூஷனுக்கு கிரான்ட்-இன் எய்ட் என்கிற முறையில் பணம் கொடுத்து வந்தது. இப்போது நாம் அதை நிறுத்தி விட்டு நாமே செய்யலாம் என்று ஆரம்பித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனைகளை ஏற்றுக்கொண்டு இந்த அரசு ஆவன செய்யும்.

செல்வி அ. லீலாவதி: பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு யோக நிலைப் பயிற்சியை அளிக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: இப்பொழுதே நாம் உயர் நிலைப் பள்ளிகள், மேல் நிலைப் பள்ளிகள் இன்னும் மற்றப் பள்ளிகளில் எல்லாம் பிசிக்கல் டிரெயினிங், டிரில் கொடுத்து வருகின்றோம். யோக நிலைப் பயிற்சியையும் பல பள்ளிக்கூடங்களில் சொல்லிக்கொடுத்து வருகிறார்கள். அதை நானே பல பள்ளிகளில் சென்றபோது பார்த்திருக்கிறேன். இப்போது இதை இன்னும் சொல்லப்போனால், விஞ்ஞான ரீதியாகச் செய்துகொண்டிருக் கிறார்கள்.

திரு. க. அருணாசலம் : ‘ இன்டியன் கவுன்சில் ஆஃப் யோகா ’ என்ற நிறுவனத்தின் தலைவர் தீரேந்திர பிரம்மச்சாரி இப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு ஆராய்ச்சி செய்ய உதவி செய்து வருகிறார்கள். அவர்களுடைய உதவியை நம்முடைய மாநிலத்தில் பயன்படுத்தி, தனிப்பட்ட முறையில் மதுரை, கோயம்பத்தூர் முதலிய நகரங்களில் அங்குள்ள மெடிக்கல் காலேஜுகளை யொட்டி யோக நிலைப் பயிற்சி நிலையங்களை அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தீரேந்திர பிரம்மச்சாரி பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அவரைப்பற்றிய முழு விவரமும் எனக்குத் தெரியாது. ஆனால் நம் மாநிலத்தில் யோக நிலைப் பயிற்சி என்பது அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு முறை. பல்வேறு நிபுணர்கள், ‘ எக்ஸ்பெர்ட்ஸ் இன் டையபெட்டோலாஜிஸ் ’ எல்லாம் இதிலே கவனம் செலுத்தி வருகிறார்கள். இந்தப் பயிற்சியை மேற்கொள்வதன் மூலம் பல்வேறு நோய்கள், குறிப்பாக டையபெட்டில் நோய் களையப்படும் என்று ஆதாரத்தோடு சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இப்போதே இதற்கான பயிற்சிக்குரிய சாத்தியக்கூறுகள் நம் மாநிலத்தில் இருக்கின்றன. ஆனால் இதை முழுமையான அளவில் பரவச் செய்ய எல்லா ஏற்பாடுகளையும் இந்த அரசு செய்யும்.

திருவாரூர் வ. சோ. ஆண்கள் உயர் நிலைப் பள்ளி.

**168 வினா.*—திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவாரூர் வ. சோ. (ஆண்கள்) உயர் நிலைப் பள்ளிக்குப் பக்கத்தில் இருக்கும் சூரியன் குளத்தைத் தூர்த்து விளையாட்டு மைதானமாக்கித் தரப்படும் என அரசு உறுதியளித்திருந்ததா ?

(இ) அப்பணிக்கென ஒதுக்கப்பட்ட தொகை அக்குளத்தைத் தூர்க்க போதுமானதாயில்லை என்பதை அரசு அறியுமா ?

(உ) ஆம் எனில், அப்பணிக்குக் கூடுதல் தொகை ஒதுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?